உ

சிவமயம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தம்பாலையை
வசிப்பிடமாகக் கொண்ட

அமரர்

## திரு. இளையதம்பி - சண்முகநாதன்

அச்சுவேலி ப.நோ.கூ. சங்க விற்பனை முகாமையாளர்)

அவர்களின்

# நினைவு மலர்

23-06-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## விநாயகர் துதி

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்-கோலஞ் செய்
துங்கக் கரி முகத்து தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.



## சமர்ப்பணம்

இல்லக் குலவிளக்காய் எமக்கிருந்தீர்!
எல்லாக் கடமைகளும் இனிதே செய்தீர்!
கடமையே கண்ணெனவே கருதி வந்தீர்!
கண்ணியமே வாழ்க்கை என்று எண்ணி வாழ்ந்தீர்!
பணியகத்தில் பலராலும் போற்றப் பெற்றீர்!
துணிவோடு செயலாற்றும் தூய நெஞ்சீர்!
சுடரே உம்திருவடிக்கு இம்மலர்
சமர்ப்பணமே!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


சிவமயம்

அமரர்

# இளையதம்பி - சண்முகநாதன்

அவர்கள்

பிறப்பு ★ 14 ★ 02 ★ 1947



இறப்பு ★ 24 ★ 05 ★ 2001

## திதி வெண்பா

ஆண்டு விஷுவருட ஆன வைகாசியின்
பூண்ட திதியாம் பிரதமையில் -நீண்டபுகழ்
நற்குணன் சண்முக நாதன் மண்விட்டீசன்
பொற்பதம் சேந்தான் புகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அருட்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

எத்தாயரெ த்தந்தையெ ச்சுற்றத்தா
    ரெம்மாடு சும்மாடமேவர் நல்லார்
செத்தால்வந் துதவுவா ரொருவரில்லைச்
    சிறுவிறகாற் றீமூட்டிச் சொல்லாநிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடுபொன்னித்
    திருவானைக் காவுடைய செல்வாவென்ற
னத்தாவுன் பொற்பாத மடையப்பெற்றா
    லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
    பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
    திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகே னார்க்கெடுத் துரைக்கே
    னாண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
    வருகவென் றருள் புரியாயோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணிபவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணீபு வனபோக மேயோக
வெள்ளமே மேருவி ல்வீரா
ஆறணிசடை யெம்மற் புதக்கூத்தா
அம்பொன் செயம்பலத் தரசே
ஏறணிகொடி யெம்மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்தி ரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென் னும்பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பவளமால் வரையில் நிலவெறிப்பது போற்
பரந்த நீற்றழகு பச்சுடம்பிற்
திவள மாதுடன் நின்றாடிய பரமன் சிறுவனைப்
பாரதப் பெரும் போர்
தவள மாமருப் பொன்றொடித் தொருகரத்தில்
தரித்துயர் கிரிப்புறத் தெழுதும்
கவளமா களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்து கைதொழுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவோனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துயர துகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமானே

## பட்டினத்தடிகள் பாடல்

நல்லாரிணக்கமு நின்பூசைநேசமு ஞானமுமே
அல்லாதுவேறு நிலையுளதோவக மும்பொருளும்
இல்லாளுஞ்சுற்ற முமைந்தரும் வாழ்வுமெழிலுட ம்பும்
எவ்வாம்வெளி மயக்கேயிறைவாகச் சியேகம்பனே.

பிறவா திருக்கவரம் பெறல்வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டுகாணிது வெப்படியோ
அறமார்புகழ் தில்லையம்பல வாணரடிக்கமல
மறவா திருமன மேயதுகாணன் மருந்துனக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# இளையதம்பி - சண்முகநாதனின்
# வாழ்க்கை வரலாறு

ஈழவள நாடாம் இலங்காபுரியின் சிகரமாய் அமைந்து விளங்குவது யாழ்ப்பாணக் குடாநாடு இந்நாட்டை அழகுறுத்தும் அணிகலன்களாக திகழ்கின்ற அளவையூர் என வர்ணிக்கப்படுகின்ற அளவெட்டியினிலே கோயில் கொண்டு அருளாலும் அழகாலும் பொலிந்து திகழ்ந்து கும்பிளாவளைச் சித்திவிநாயகர் அங்குகோயில் கொண்டு அருளொளி சிறக்கும் பானை வயிற்றோனைப் பண்டுதொட்டுப் பணிந்து வாழ்ந்தவரும் உயர் சைவகுலத்தின் இளையதம்பி நாகம்மா தம்பதியினருக்கு இல்லறம் என்னும் நல்லறத்தில் விளைந்த பஞ்சமுத்துக்களில் இரண்டாவது முத்தே அமரர் இவராவார் இராஜேஸ்வரி என்னும் அக்காவுடனும் வனிதாதேவி, ராணி என்னும் இரு தங்கைகளுடனும் இரத்தினராசா இராசலிங்கம் என்னும் தம்பி இருவருடனும் பாலகப் பருவத்திலேயே அளவையூர் என்னும் அருணோதயாவிலேயே கல்வி கற்று வந்த அளவில்

> "வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவும் தம்போற் செயின்"

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாழ்க்கையினை ஏற்றுக் குலத்தொழிலாம் கூட்டுறவில் ஈடுபடலாயினார். பருவத்தே தொழில் செய்வதால் நிறைந்த செல்வத்துடனும் திகழ்ந்தமையைக் கண்ட ஊரார் இவரை அன்புடன் "ஆணைக்குட்டி ஐயா" என அழைக்கலாயினர்.

பிரமச்சாரியான வாழ்வில் நின்று இல்லறத்தில் இணைய விரும்பிய சண்முகநாதன் அவர்கள் அச்செனத் திகழ்கின்ற அச்சுவேலிக் கிராமத்தின் ஒரு தொகுதியிலேயே தம்பாலை எனப்புகழ் பூத்து விளங்குகின்ற கிராமத்திலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழுடன் திகழ்ந்த சிவச்சாமி சின்னம்மா தம்பதிகளின் மூத்த புத்திரியான சிவயோகம் அவர்களை தனது துணை வியாகக் கொண்டு விருந்தோம்பலில் ஈடுபட்டு வாழ்ந்துவந்த காலத்தில் முன்பு செய்த நல்லறத்தின் பலனால் மூன்று பெண் பிள்ளைகளையும் இரண்டு ஆண் பிள்ளைகளையும் பெற்றெடுத்தார்.

''தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி இருப்பச் செயல்''

என்னும் கூற்றுக்கு இணங்க தனது அன்புச்செல்வங் களை கல்வி வேள்விகளிற் சிறப்படையச் செய்தார் அதன் பலனாக பிள்ளைகள் ஐவரும் ஈழநாட்டில் புகழ்பெற்று அவர் வழி விளங்கினர்

சிறந்த கூட்டுறவாளனாகத் திகழ்ந்த சண்முகநாதன் அவர்கள் எந்நேரமும் தனது சேவையினைக் கூட்டுறவிற் காகவே கழித்தார் அவர் அதிகாலையில் எழுந்து தனது குலதெய்வமாகிய விநாயகப் பெருமானை வழிபட்டு பின்னர் மனைவி பிள்ளைகளது குறை நிறைகளைத் தீர்த்துச் செல்வதுமே இவரது அன்றாட வழக்கமாகும் இவர் தனது கூட்டுறவின் மீதுகொண்ட பற்றின் காரணமாகவே 1995-ம் ஆண்டு இடம்பெயர்வின் போதும் தனது மனைவி பிள்ளை களை விடத் தனது கூட்டுறவின் மேற்கொண்ட பற்றின் காரணத்தினால் தனது உயிரைத் துச்சமெனமதியாது அல்லும் பகலுமாக அன்றும் இன்றும் கூடடுறவிற்காகவே உழைத்து வந்தார் இன்று கூட இவரது கூட்டுறவின் மீது கொண்ட அளவற்ற பற்றின் காரணத்தினால் இவரை ஒரு உயர்பீடத்தில் அமர்த்தி இருந்தார்கள் அவர் தான் உயர் பீடத்தில் இருப்பதை தனது பெருமை அல்லது புகழ் என நினையாது வாழ்ந்தவர் இவராவர்

இந்த நியதிப்படியே எங்கள் தந்தையாரும் இந்தநிலவு லகத்திலே தோன்றி பெறுதற்கரிய இம்மனித பிறவி எடுத் ததனாலாய பயன்களை ஓரளவு துய்த்து தாம் ஆற்றிய நற் கருமங்களால் வரக்கூடிய புண்ணியத்தையும் தமக்கு வழித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையாகக் கொண்டு திடீரென மறைந்து விட்டார்.

ஒளிதரும் விளக்கு எண்ணெய் அற்ற நிலையில் அணை வதற்கு முன் அதன் ஒளியிலே ஒரு வீச்சுத் தென்படுவது போல சாவந்து அவரை அணைத்துக் கொள்வதற்கு முன் அவரது செயலிலும் பேச்சிலும் மாற்றமும் வீச்சும் இருந் ததை உணரமுடிகிறது.

தொல்லையில்லாத மனிதன் தொல்லையில்லா ஊருக்கு வானருக்கு விருந்தினராய் சென்றுவிட்டார். என்று முள்ள பரம்பொருளின் அருளுக்கு ஆட்பட்டு அவன் பாத நிழலில் நீடுவாழ அவர் பெற்ற பேற்றை எண்ணி நாமும் வியந்து அவனடி போற்றுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"அழுக்கடைந்த ஆடையைக் களைந்து விட்டு
புதிய ஆடையை அணிந்து கொள்வது போல்
மூப்புவந்து மரணம் அடையும் போது -ஆன்மா
பழைய உடலைக் களைந்து விட்டு
புதிய உடலை எடுத்துக் கொள்கின்றது"
-ஆதிசங்கர்

கூடிருந்து புள்பறக்கும் கொம்பிருந்து பூவுதிரும்
ஓடுநதி ஆழியுடன் ஒன்றாகும் - வாடிமிக
சோகம் சுமந்தாவி சோர்வதனால் யாதுபயன்
ஏகனடி சேர்ந்தாரென் றெண்ணு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# இளையதம்பி சண்முகநாதனின்

# வம்சாவழி

துணைவியார்:- சிவயோகம்

பிள்ளைகள் :-

ச. சுஜிதா
ச. துவாரகன் (2001 கலைப்பிரிவு மாணவன் அச்சுவேலி மத்திய கல்லூரி)
ச. காயத்திரி
ச. தூபதீபன்
ச. தர்ஷினி - தரம் - 8 மாணவி (அச்சுவேலி ம. க)

மருமகன்:- யோகலிங்கம்

மைத்துணர்கள்:- சி. தர்ப்பரன், சி. முருகையா, தியாகராசா

மைத்துணி:-

யோகேஸ்வரி

பேரப்பிள்ளைகள்:-

துவாகர், திவாகர், கயூரன்

மருமக்கள் :-

சுதா (கனடா)
வவா (கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணா (லண்டன்)
டினேஸ் (மாணவன் அச்சுவேலி மத்திய கல்லூரி)
சபேஸ் (மாணவன் ,,
சங்கீதா (மாணவி சரஸ்வதி வித்தியாசாலை)
சர்மிலா (மாணவி ,,
சரண்யா (மாணவி ,,
ஜீவன் (மாணவன் அருணோதையா கல்லூரி)
றஞ்சன்
ரவி (இத்தாலி)
றஜனி (கொழும்பு)
றமணி (கனடா)
றமணன் (வவுனியா)
கஜன் (மாணவன் ஏழாலை ம.வி)
கிஷாந்தன் (மாணவன் ,,
யானுதி (மாணவி) ,,
நிலுயா (இத்தாலி)
நிலுயன் (கனடா)
கீர்த்தன் (கொழும்பு)
கீர்த்திகா (கொழும்பு)
அபிராமி (லண்டன்)
அபர்னா (லண்டன்)
லக்ஷனா (மாணவி உடுவில் பெண்கள் பாடசாலை)
சங்கர் (யாழ் பல்கலைக்கழகம்)
அமிர்தா (யாழ் பல்கலைக்கழகம்)
சயன் (உயர்தர மாணவன் ஸ்கந்தா கல்லூரி)
மது (மாணவி உடுவில் பெண்கள் பாடசாலை)
சரண் (மாணவன் மகாஜனா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது வாழ்விற்கு ஒளி விளக்காய் அன்புற்று வளமான வாழ்விற்கு வழிவகுத்து வந்த எமது குடும்பத்தலைவர் திரு. இளையதம்பி சண்முகநாதன் அவரின் மரணச் சடங்கிலும் இறுதி யாத்திரையிலும் பங்குபற்றி அனுதாபம் தெரிவித்து, அஞ்சலி செலுத்தியவர்கள், இறுதிக்கிரியைகளிலும், ஊர்வலமும் சிறப்பாக நிகழ்வதற்கு அன்பாக உதவி புரிந்தவர்கள், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களான அச்சுவேலி ப நோ கூ. சங்கத்தினருக்கும், மற்றும் அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவர்களிற்கும், மற்றும் அச்சுவேலி அறிவகம் கல்வி நிறுவனத்தினருக்கும், மற்றும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களிற்கும், அந்தியேட்டிக் கிரிகைகளிலும் சபிண்டிக்கிரியைகளில் பங்குபற்றிச் சிறப்பித்தவர், மதியபோசன உபசாரத்தில் பங்களித்து மகிழ்வித்தவர்கள் ஆகிய அனைவரிற்கும் இந்த நினைவு மலரை குறுகிய நாட்களில் அச்சிட்டு உதவிய ஸ்ரீகண்ணகி அச்சகத்தாருக்கும். எமது உளம் நிறைந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

நன்றி!

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி.
23-6-2001

★ ஸ்ரீ கண்ணகி அச்சகம் அச்சுவேலி ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org